**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 56/2017** **Date:11.02.2026.**

**(PW1)- ராதகிருஷ்ணன்**

<u>**3** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. 1ம் பிரதிவாதி என்னுடைய அம்மா என்றாலும் 2ம் பிரதிவாதி எனது தம்பி என்றாலும் சரிதான். 1ம பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 இன சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துகள் சர்வே எண் 212/10 , 214/37, 202/12 ஆகிய சர்வே எண்களில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி சொத்க்களில் சர்வே எண் 214/37 மட்டும் தான் வழக்கு சொத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மற்ற இரண்டு சொத்துக்களை வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, வழக்கில் மொத்த சொத்தையும் சேர்த்துள்ளேன்.

2. என்னிடம் காட்டப்படும் பிராதில் ஒரு சர்வே எண் சொத்து மட்டும் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற இரண்டு சொத்ககளை ஏன் சேர்க்கவில்லை என்றால் ஒரு சொத்து கோவில் சொத்து என்பதாலும் மற்றொரு சொத்து நான் கிரயம் பெற்றது என்பதால் சேர்க்கவில்லை. மேற்படி விபரத்தை நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எனது குடும்ப உறுப்பினர்களிடம் ஆலோசனை செய்யப்பட்ட பின்பு தான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி ஆவணம் எழுதப்பட்ட விபரம் எப்போது தெரியும் என்றால் 2016 வருடம் தெரியும். 2007 குடும்ப ஏற்பாட்டின் பின்பு தாவா சொத்து கூட்டு உரிமையிலும் உடமையிலும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

3. தாவா சொத்து 2007 பின்பு கூட்டாகதான் அனுபவம் செய்யப்பட்டது என்பதை காட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம என்றால் தாக்கல் செய்ய முடியாது. 2007 பின்பு தாவா சொத்திற்கு எனது தம்பி தான் அவரது பெயருக்கு பட்டா பெற்று வரி செலுத்தி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது வீடு அமைந்துள்ள சொத்தின் சர்வே எண் 214/37 என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு எனது பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல, 7 செண்ட்ற்க்கு மட்டும் தான் எனது பெயரில் பட்டா உள்ளது, மொத்தம் 9 செண்ட் ஆகும். மேற்படி 7 செண்ட் எனக்கு எவ்வாறு உரிமைப்பட்டது என்றால் எனது தம்பியான 2 ஆம் பிரதிவாதி 2009 ம் வருடம் எழுதிக் கொடுத்தார்.

4. மேற்படி 2009 ம் வருட ஆவணம் செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி 2009 ஆவணத்தில் அவருக்கு மேற்படி சொத்து 2007 செட்டில்மெண்ட ஆவணப்படி கிடைத்தாக குறிப்பிட்டுள்ளர் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து 2ம் பிரதிவாதிக்கு 2007 ஆவணப்படி தான் கிடைத்தது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தம்பி 2009 எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 7வது பக்கத்தில் கடைசி வரியில் 2007 ஆவணம் மூலம் மேற்படி சொத்து 2ம் பிரதிவாதிக்கு கிடைத்தது என்று குறிப்பிட்டுள்ளார் என்றாலும் மேற்படி ஆவணத்தின் அசல் முன் பத்திரத்தின் புகைப்பட நகலை கொடுத்து உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றாலும் சரியல்ல. நான் மேற்படி 2007 ஆவணம் 2016 தான் தெரியவந்ததாக வழக்கிற்காக பொய்யகாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதியே சமயத்திலேயே எனக்கு தெரியும் என்றாலும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. வழக்கு சொத்தில் எனது அப்பா அடக்கம் செய்து காட்டக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலமா என்றால் கல்லறையாக கட்டவில்லை. நான் எனது பிராதில் ஒரு கல்லறை இருப்பதாகவும் அதை 1,2 பிரதிவாதிகள் இடித்து மாற்றிவிட்டு கிரயம் கொடுக்கபோவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெற்றவர் என்றால் சரிதான் தற்போது தாவா சொத்தில் 3ம் பிரதிவாதி வீடு அமைத்து அதில் 3ம் பிரதிவாதியின் மகன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

7. நான் விளம்புகை பரிகாரம் மட்டும் கேட்டுள்ளேன் என்றாலும் பாகம் கேட்டோ சொத்தை மீட்க கேட்டோ வழக்கை தாக்கல் செய்யல்வில்லை என்றால் சரிதான். எனவே எனது வழக்கு நிலக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. E, F பரிகாரத்திற்கு நான் முறையாக மதிப்பீடு செய்யாமல் முறையான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிாவாதி முறையான வில்லங்கம் பார்த்து வில்லங்கம் இல்லாததால் சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.